**12.02.2025.** CC. 217/2023 PW.1 திருமதி. தங்கலீலா

**கடந்த 20.11.2024 ம் தேதி விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2025, dated 29.01.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

<u>குறுக்கு விசாரணை</u> : <u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>

2. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய வீடு இரும்பிலி ஜங்சனில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் ஈக்கில் எடுக்கமாட்டேன். நான்குளிக்கப்போனபோது வேறு பெண்கள் குளித்துக்கொண்டிருந்தார்களா என்றால் இல்லை, நான் மட்டும் தான் குளித்துக்கொண்டிருந்தேன்.

3. நான் அந்த வாய்க்காலில் 5 அடி ஆழத்தில் இறங்கி தான் துணி துவைத்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வாய்க்கால் உப்பளம் அருகில் உள்ளது என்றால் சரிதான். உப்பளம் அருகில் தான் எங்கள் வீடு உள்ளது என்றால் வினு ஆஸ்பத்திரி பக்கத்தில் தான் உள்ளது. வினு ஆஸ்பத்திரிக்கும் உப்பளத்திற்கும் 100 மீட்டர் வித்தியாசம் இருக்கும் என்றால் சரிதான். நான் அந்த வாய்க்கால் பகுதியில் தான் குளித்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான்.

4. மேற்படி பகுதியில் ஒரு டஸ்மார்க் கடை உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. சம்பவயிடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் தள்ளி உள்ளது. மது அருந்துபவர்கள் அங்கு உட்கார்ந்து தான் மது அருந்துவார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. தங்கராஜ், ஜாண்சன் எனக்கு தம்பிகள் . றோஸ்சிலியும், ஜெப கிருபாவும் எனது தம்பிகளின் மனைவிகள். அவர்களின் வீடுகள் வாணியக்குடி செல்லும் சாலையில் இருந்தது என்றால் சம்பவ காலத்தில் இருந்தது.

5. என்வீட்டிலிருந்து 10 நிமிடம் நடந்தால் தான்அங்கு போகமுடியும் என்றால் சரிதான். எனக்கு போண் பேசும் பழக்கம் இல்லை என்றால் சரிதான். நான் சொல்லி தான்என் குடும்பத்தினருக்கு தகவல் தெரியும் என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தன்று சம்பவத்தில் ஈடுபட்ட நபர்என்ன உடை போட்டிருந்தார், அவருடைய அடையாளம் என்னவென்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவத்தில் எனக்கு உடை கிழிந்ததா என்றால் ஆம் கிழிந்தது. மேற்படி உடையை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் சொல்லியிருந்தேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை

என்றாலும், போலீசார் சொல்லிக் கொடுத்ததின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**12.02.2025.** CC. 217/2023 PW.2 திருமதி.ரோசிலி

**கடந்த 20.11.2024 ம் தேதி விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2025, dated 29.01.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

4. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.1 தங்கலீலா எத்தனை மணிக்கு குளிக்க போனார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். சம்பவயிடத்தின் அருகில் பிரேமலதா, முருகன் ஆகியோர்கள் வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் உள்ளது. ஆனால் பெயர் தெரியாது. வீட்டிலிருந்து சத்தம் கேட்டால் பார்க்ககூடிய தூரத்தில் தான் இருந்தது என்றால் சரிதான்.

5. சம்பவத்தினத்தன்று மேற்படிவீட்டில் ஆட்கள் இருந்தார்கள் என்றால் ஆட்கள் இல்லை. இரும்பிலி ஜங்சன் அருகில் டாஸ்மார்க் கடை உள்ளதா என்றால் உள்ளது. மது அருந்துபவர்கள் அந்த பகுதியில் உட்கார்ந்து தான் மது அருந்துவார்கள் என்றால் இல்லை. நான் அ.சா1 கிளம்பிய அரை மணி நேரத்தில் சென்றிருப்பேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், அ.சா1 எனது அண்ணி என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,

இரணியல்.

**12.02.2025.** CC. 217/2023 PW.3 திருமதி. ஜெப கிருபா

**கடந்த 20.11.2024 ம் தேதி விசாரணை முடிக்கப்பட்ட நிலையில் இந்நீதிமன்ற M.P. No. 1/2025, dated 29.01.2025 ன் படி கு.வி.மு.ச 1973 பிரிவு 311 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் இன்று மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை : குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

2. இதற்கு முன்னர் நான் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த சங்கதிகள் எனக்கு ஞாபகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் எனது வீடு வினு ஆஸ்பத்திரி பக்கம் தான் இருந்தது. என் அக்கா, அ.சா2 ன் வீடு ராவிளை, வாணியக்குடியில் இருந்தது. சம்பவயிடமானது உப்பளம் அருகில் உள்ள பாம்பன் வாய்க்கால் பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பெயர், விவரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நான் உண்மைக்கு மாறாக என் அண்ணிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.